ஆண்டறிக்கை

2020

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

14-07-2021

கேளரவ பந்துல குணவர்தன
வர்த்தக அமைச்சகம்,
இல. 492இ
எல். எச். பியஸேன கட்டிடம்இ
ஆர். ஏ. டி. மெல் மாவத்தைஇ
கொழும்பு 03.

மதிப்பிற்குரிய ஐயா

கணக்கியல் கூற்று மற்றும் ஆண்டறிக்கை – 2020

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (2) இற்கு அமைவாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை பின்வரும் ஆவணங்களுடன் இணைத்து, இயக்குனர்கள் சபை சார்பாக சமர்பிப்பதில் நான் மகிழ்வடைகிறேன்.

- தலைவர் அறிக்கை
- கணக்கியல் கூற்று
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

தங்கள் உண்மையுள்ளஇ

சுரேஷ் டி. மெல்

தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

பொருளடக்கம்

		பக்கம்
1.	அறிமுகம்	65-66
2.	தலைவரின் ஆசிச் செய்தி	67-68
3.	இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை	
	பணிப்பாளர்கள் சபை – 2020	69-70
	சிரேஷ்ட முகாமைத்துவப் பதவியினர் - 2020	71-72
4.	இலங்கை ஏற்றுமதி செயலாற்றுகை 2020	73
	இலங்கை ஏற்றுமதி செயலாற்றுகை 2020	74-78
	2020 சனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியல் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றங்கள.	79-85
	வழங்கல் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி	86
	கொள்ளளவு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்	87
	ஏற்றுமதியாளர் வசதி	88-90
	சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி (ளுஆநு) அபிவிருத்தி	90-95
	வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல்	95-96
	2021 ஆம் ஆண்டுக்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் எதிர்கால திட்டங்கள்	97-98
5.	நிதி அறிக்கை 2020	99
	நிதியியல் நிலைக் கூற்று	100
	விரிவான வருமானக் கூற்று	101
	சமநிலை மாற்றக் கூற்று	102
	காசுப்பாய்ச்சல்க் கூற்று	103
	கணக்கியல் குறிப்புக்கள்	104-114
6.	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	115-122

அறிமுகம்

ஏற்றுமதி சம்பாத்தியத்தை அதிகரித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் பொருட்டு பங்களிப்பு செய்யும் நோக்கத்துடன் இலங்கையின் ஏற்றுமதியை அபிவிருத்தி செய்தலும் மேம்படுத்தலும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் முன்னணி பணியாகும்.

நாட்டின் முன்னணி சந்தை அபிவிருத்தி அமைப்பென்ற வகையில் சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புபட்ட சகல விடயங்களையும் உள்ளடக்குகின்ற நிறுவனம் என்ற வகையில் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றது.

1929 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் மூலம் ஏற்றுமதி அபிவிருத்தி சபை தாபிக்கப்பட்டுள்ளது. தேசிய ஏற்றுமதி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக உபாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற போது அதன் பொறுப்புக்களை நிறைவேற்றி கொள்கை ஆலோசகராக, மேற்பார்வையாளாக, மேன்படுத்துனராக, வசதி வழங்குனராக மற்றும் அறிவு வழங்குனராக அதன் பொறுப்புக்களை நிறைவேற்றி வருகின்றது.

அதன் பிரகாரம் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் பின்வரும் உபாயத் திட்ட பணிகளுக்கு இணங்கியதாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இநதப் பணிகள் ஏற்றுமதியாளர்களை விருத்தி செய்தல் மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்தல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்னுட்பம், மனித முதலீட்டு அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகளை மேம்படுத்தல் வரையான ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பல்வேறு பிரிவுகளினூடாக தொழிற்படுகின்றது.

நோக்கு

"புத்தாக்க தயாரிப்புகள் மற்றும் சேவைகளுக்கான ஒரு முக்கிய ஏற்றுமதி மையமாக இலங்கையை நிலைப்படுத்துதல்."

செயற்பணி

"புத்தாக்கம், தொழில்முயற்சித்துவம் மற்றும் உலகளாவிய ஒருங்கிணைப்பு மூலம் ஏற்றுமதி போட்டித்தன்மையை ஏற்படுத்துதல்."

உபாயத்திட்ட நோக்கங்கள்

1. **தற்போது இருக்கின்ற ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் ஏற்றுமதிகளை பாதுகாத்துக் கொள்வதற்கு உதவியளித்தல்** - சர்வதேச வர்த்தகத்தில் போட்டியிடுவதற்காக ஏற்றுமதியாளர்களுக்கு பொருத்தமான வியாபார சூழலொன்றை உருவாக்குதல்.
2. **இலங்கையின் தற்போதைய ஏற்றுமதிகளை மாற்றுவதற்காக இலங்கையிலிருந்து புதிய ஏற்றுமதிகளை மேம்படுத்துதல்** பெறுமதி சேர்த்தல், புத்தாக்கம் மற்றும் புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் தற்போதைய ஏற்றுமதிகளை பல்வகைப்படுத்துதல்
3. **புதிய சந்தை உதவிகளுக்கான பல்வகைப்படுத்தல்** ஏற்றுமதி சந்தைகள் சில உற்பத்தி சந்தைகள் சிலவற்றின் மீது தங்கியிருப்பதன் மூலம் தற்போதைய ஏற்றுமதி சந்தைகளை பல்வகைப்படுத்தல்
4. **கொள்ளளவு வளர்ச்சியை மேம்படுத்துதல்** - தமது கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் போது ஏற்றுமதியாளர்களின் கொள்ளளவை அதிகரித்தல்.

5. **நாட்டுக்குள் ஏற்றுமதியின் மூலம் வெளிநாட்டு முதலீடுகளை உருவாக்குதல்** - உற்பத்தியையும் உற்பத்தித்திறனையும் அதிகரத்தல் மற்றும் உயர் தொழினுட்பத்தினை ஏற்றுக்கொள்ளுதல்.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிகள்

- பேரண்ட/ நுண் பொருளாதார சூழலை மேம்படுத்துவதற்கு உதவியளித்தல்.
- தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம், துறை சார் திட்டம் போன்றவற்றை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.
- ஒருங்கிணைந்த வழங்கல் / தொழில்நுட்பம் / தரம் / பொதியிடல் / வடிவமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
- சந்தை வாய்ப்புக்களை அடையாளம் காண்பதற்காக சந்தை ஆராய்ச்சி /ஆய்வு
- தற்போது இருக்கின்ற சந்தைகளை விரிவுபடுத்துவதற்கும் புதிய/ வளர்ந்து வரும் சந்தைகளுக்குள் நுழைவதற்கும் சந்தை அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல்
- பிராந்திய மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி அபிவிருத்தி நகழ்ச்சித் திட்டங்கள்
- சந்தை தகவல் மற்றும் ஈ-வர்த்தக சேவைகளை வழங்குதல்.
- வர்த்தக வினைத்திறனை ஏற்படுத்துவதற்காக ஏற்றுமதியாளர்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகளுக்கு/ தடைகளுக்கு தீர்வுகளை வழங்குதல்.
- ஏற்றுமதி உதவி சேவைகளின் தரத்தை மேம்படுத்தல்.
- சர்வதேச உள்நாட்டு சந்தை உதவி சேவைகளுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- திறன் / தொழில்முயற்சித்துவம் / பயிற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- 2014 யூலை 11 ஆம் திகதிய 1870/71 இலக்கத்தைக் கொண்ட சட்டத்தில் காட்டப்பட்டுள்ளவாறு தேசிய சேதனக் கட்டளைகளை நடைமுறைப்படுத்துதல்.

தலைவரின் செய்தி

ஊழுஏஐனு-19 தொற்றுநோய் உலகளாவிய பொருளாதாரத்திற்கும் உலக வர்த்தகத்திற்கும் முன்னோடியில்லாத வகையில் இடையூறு விளைவித்ததுஇ அதனுடைய பாதகமான விளைவுகளைத் தணிக்க அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டியது.

இலங்கையின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் இந்த அமைப்பு அர்ப்பணிக்கப்பட்டுள்ளதால்இ இந்த காலகட்டத்தில் நுனுடீஇ அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் துறைக்கு இடையிலான தொடர்ச்சியான முயற்சிகள் மற்றும் ஒத்துழைப்பு நாட்டிற்கு ஊக்கமளிக்கும் ஏற்றுமதி செயல்திறனை பதிவு செய்ய உதவியது.

வைரஸின் பரவல் மற்றும் அதன் விளைவாகக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மிகவும் தீவிரமாக இருந்த மாதங்களில் வணிக ஏற்றுமதி கடுமையாகக் குறைந்ததுஇ ஆனால் எதிர்பார்த்ததை விட விரைவில் தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளை அடைந்தது. ஊழுஏஐனு-19 பரவுவதை எதிர்த்து இலங்கையில் செயல்படுத்தப்பட்ட முடக்கல்கள் மற்றும் பிற பொது சுகாதார கட்டுப்பாடுகள் 2020 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யக்கூடிய பொருட்களின் உற்பத்தியை எதிர்மறையாக பாதித்தன. இதற்கிடையில்இ வெளிப்புற தேவைஇ கப்பல் மற்றும் விநியோக சங்கிலிகளுக்கு இடையூறுஇ வெளிநாடுகளில் முடக்கல் நடவடிக்கைகள் காரணமாக தேவையான உள்ளீடுகளை இறக்குமதி செய்வதில் சிக்கல்கள்இ மற்றும் பாதகமான விலை நகர்வுகள் 2020 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த ஏற்றுமதி செயல்திறனையும் பாதித்தன.

ஊழுஏஐனு-19 ஆல் பாதிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி துறைகளை புத்துயிரூட்டுவதற்கு விசேட கவனம் செலுத்தும் அதேவேளையில்இ ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (நுனுடீ) 2018-2022 தேசிய ஏற்றுமதி உபாயமுறையை (நுஏளு) தொடர்ந்து செயல்படுத்தியது. இதற்கிடையில்இ தொற்றுநோய் காலப்பகுதியில் ஆன்லைன் முறைகள் மூலம் சந்தை மேம்பாட்டு திட்டங்களை நுனுடீ தொடர்ந்தது.

ஏற்றுமதி பொருளாதாரத்தை பெறுமதி சேர்க்கப்பட்ட தொழில்களை அதிகரிப்பதன் ஊடாக விரிவுபடுத்துவதன் மூலம் இலங்கையை வளமான நாடாக மாற்றுவதும் அரசாங்கத்தின் நோக்கமாகும்.

நுனுடீ இன் தலைவர் என்ற முறையில்இ எதிர்காலத்தில் சாதகமான மாற்றங்களைக் கொண்டுவருவதில் நான் உறுதியாக இருக்கிறேன். எங்களை மிகவும் பாதிக்கப்படக்கூடிய காலத்தில் தேசிய பொருளாதார தேவைகளுக்கு சேவை செய்ததற்காக முழு ஏற்றுமதி சமூகத்திற்கும் நான் நன்றி கூற விரும்புகிறேன்இ மற்றும் எங்களுடைய ஏற்றுமதி சமூகத்திற்கு சேவை செய்ய நுனுடீ இல் நாங்கள் தயாராக இருக்கிறோம்.எதிர்கால சவால்களில் ஈடுபடுவதில் ஏற்றுமதியாளர்கள் சாதகமான நிலைப்பாட்டை எடுப்பார்கள் என்று நம்பப்படுகிறது.

ஏற்றுமதித் துறை இப்போது இலங்கையின் பொருளாதாரத்தின் மிக முக்கியமான துறையாக மாறியுள்ளதுஇ நாங்கள் தொடர்ந்து முடிவுகளை வழங்குவோம்இ மேலும்
சர்வதேச வர்த்தக அரங்கில் புதிய உயர்ச்சிகளை அடைவதற்கு இன்னும் ஒரு வருடத்தை எதிர்பார்க்கிறோம்.

இறுதியாகஇ விலைமதிப்பற்ற ஆதரவை வழங்கிய சபை உறுப்பினர்களுக்கு எனது மிக உயர்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிறுவனத்தின் இலக்கை அடைய ஆண்டு முழுவதும் செயல்பட்ட நுனுடீ இன் நிர்வாகத்திற்கும் ஊழியர்களுக்கும் அவர்களின் முயற்சிகள்

மற்றும் அர்ப்பணிப்புக்காக பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிறுவனமும் சேவையில் சிறந்து விளங்கும் என்று நம்பப்படுகிறது.

அதனுடன்இ நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

சுரேஷ் டி டி மெல்
தலைவர் மற்றும் தலைமை நிர்வாகி
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

பணிப்பாளர்கள் சபை - 2020

			முதல்	வரை
1.	**திரு. பிரபாத் சுபசிங்ஹ**	தலைவர்	18.12.2019	02.12.2020
2.	**திரு. சுரேஷ் டி. மெல்**	தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்	11.12.2020	தற்போது
3.	**கலாநிதி. ஜனக விக்ரமசிங்ஹ**	உறுப்பினர்	16.12.2019	தற்போது
4.	**திரு. சதுர வீ. கப்ரால்**	உறுப்பினர்	16.12.2019	தற்போது
5.	**திரு. கபுசலா ாஹம்பத்**	உறுப்பினர்	16.12.2019	தற்போது
6.	**திரு. லலன்த வடுதுர**	உறுப்பினர்	16.12.2019	தற்போது
7.	**திரு. ரனித் பியன்த வீரசிங்ஹ**	உறுப்பினர்	31.12.2019	தற்போது
8.	**கலாநிதி. கே. லக்ஷ்மன்**	உறுப்பினர்	31.12.2019	தற்போது
9.	**திரு. பீ. மொஹிடீன் அம்ஸா** மேலதிகச் செயலாளர் (பொருளாதார அலுவல்கள்) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு	உறுப்பினர்	30.12.2019	தற்போது
10.	**திரு. டப்ளியு.ஏ.டீ.எஸ். குணசிங்ஹ** மேலதிகச் செயலாளர் கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு	உறுப்பினர்	29.12.2019	01.09.2020
11.	**திரு. டீ. ஜீவனாதன்** மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) வர்த்தக அமைச்சு	உறுப்பினர்	29.12.2019	01.09.2020
12.	**திருமதி. கான்தி குணவர்தன** மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) வர்த்தக அமைச்சு	உறுப்பினர்	05.09.2020	தற்போது
13.	**திரு. எம். எம். பி. கே. மாயாதுன்ன** செயலாளர் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு	உறுப்பினர்	26.12.2019	06.09.2020
14.	**திரு. யு. டி. சி. ஜயலால்** செயலாளர் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு	உறுப்பினர்	07.09.2020	தற்போது
15.	**திருமதி. ஏ. எச். எஸ். பரீட்** பணிப்பாளர் நாயகம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு	உறுப்பினர்	09.01.2020	தற்போது

			முதல்	வரை
16.	**திரு. ஜெ. ஆர். ஜயதிலக** பணிப்பாளர- நிதி அமைச்சின் வர்த்தக மற்றும் மூதலீட்டு கொள்கை துறை – பொருளாதார மற்றும் கொள்கைத் துறை	உறுப்பினர்	18.01.2020	23.07.2020
17.	**திருமதி. அயன்தி டீபிகா டீ. சில்வா** பணிப்பாளர் நாயகம் - திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் துறை - நிதிஇ பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு	உறுப்பினர்	24.07.2020	தற்போது
18.	**திருமதி. நிலக்சி குணசேகர** செயலாளர் (கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு) விவசாய அமைச்சு	உறுப்பினர்	பிப்ரவரி-2020	தற்போது
19.	**திருமதி. டப்ளியு.எம்.ரீ.டீ. விக்ரமசிங்ஹ** மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு	உறுப்பினர்	05.02.2020	தற்போது
20.	**திரு. என்.ஜீ. பண்டிதரத்ன** மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்) தோழில்கள் மற்றும் விநியோக சங்கிலி மேலாண்மை அமைச்சு	உறுப்பினர	20.05.2020	தற்போது
21.	**திரு. ஸங்ஜய மொஹொட்டால** தலைவர் இலங்கையின் முதலீடடு வாரியம்	உறுப்பினர	07.08.2020	தற்போது

சிரே‘ட முகாமைத்துவப் பதவியினர் - 2020

1.	தலைவர் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்	திரு. சுரேஷ் டி. மெல்
2.	பணிப்பாளர் நாயகம்	திருமதி. ஜீவனி சிறிவர்தன (17.04.2020 அன்று றுய்வு பெற்றார்)
	ஒப்பந்த அடிப்படையில்	திருமதி. ஜீவனி சிறிவர்தன (ஜ 18.04.2020 – 03.08.2020 வரைஸ)
		செல்வி. சித்ராஞ்சலீ திஸாநாயக்க (ஜ 04.08.2020 முதல்ஸ)
3.	பதில் மேலதிக பணிப்பாளர் நாயகம்- நிதி மற்றும் நிர்வாகம்	திரு. எம்.கே.எஸ்.கே. மல்தெனி (30.06.2020 அன்று றுய்வு பெற்றார)
4.	பதில் மேலதிக பணிப்பாளர் நாயகம் – அபிவிருத்தி	செல்வி. சித்ராஞ்சலீ திஸாநாயக்க (ஜ 03.08.2020 வரைஸ)
5.	பணிப்பாளர் – நிதி	செல்வி. ஜீ.எம். ஹேரத்
6.	பணிப்பாளர் – மனிதவள முகாமைத்துவம்	திரு. கே.கே. ருவான் கன்னங்கர
7.	பணிப்பாளர் - வர்த்தக வசதியளித்தல் மற்றும் வர்த்தக தகவல்	திரு. எஸ்.ஆர்.பீ.இந்ரகீர்த்தி
8.	பணிப்பாளர் - தகவல் தொழில்நுட்பம்	திருமதி. இந்து அலஹப்பெரும (19.03.2019 அன்று றுய்வு பெற்றார)
	பதில் பணிப்பாளர - தகவல் தொழில்நுட்பம	திரு. டீ. கே. டீ. எஸ். ஸிஸில் (ஜ 20.03.2020 முதல்ஸ)
9.	பணிப்பாளர் – ஏற்றுமதி விவசாயம்	திருமதி. மாலனி பெத்தெகமகே
10.	பணிப்பாளர் – பிராந்திய அபிவிருத்தி	திருமதி. ஸேபாலிகா ஜயவர்தன (ஜ 25.06.2020 முதல்ஸ)
	பதில் பணிப்பாளர் - பிராந்திய அபிவிருத்தி	திரு. எஸ்.ஆர்.பீ. இந்ரகீர்த்தி (ஜ 31.01.2020 வரைஸ)
		திரு. டி. எம். பி. திஸாநாயக்க (ஜ 01.02.2020 – 24.06.2020 வரைஸ)
11.	பணிப்பாளர் - கொள்கை மற்றும் உபாய திட்டமிடல்	திருமதி. ஓ. எம். ஸி. குமுதினி (ஜ 25.06.2020 முதல்ஸ)
	பதில் பணிப்பாளர் - கொள்கை மற்றும் உபாய திட்டமிடல்	திருமதி. அச்சினி வீரவர்தன (ஜ 24.06.2020 வரைஸ)
12.	பணிப்பாளர் – கைத்தொழில் உற்பத்திகள்	செல்வி. சித்ராஞ்சலீ திஸாநாயக்க (ஜ 03.08.2020 வரைஸ)
	பதில் பணிப்பாளர் - கைத்தொழில் உற்பத்திகள	திரு. ஹர்‘ பத்பேரிய (ஜ 08.10.2020 – 11.09.2020 வரைஸ)

13.	பணிப்பாளர் – ஏற்றுமதி சேவைகள்	திரு. எம்.கே.எஸ்.கே. மல்தெனி (30.06.2020 அன்று றுய்வு பெற்றார)
	பதில் பணிப்பாளர - ஏற்றுமதி சேவைகள்	திருமதி. மனோஜா திஸாநாயக்க (ஜ 15.07.2020 முதல்ஸ)
14.	பணிப்பாளர் – சந்தை அபிவிருத்தி	திருமதி. அனோமா பிரேமதிலக
15.	உள்ளகக் கணக்காய்வாளர்	திருமதி. நில்மினி ரணசிங்ஹ
16.	சட்ட உத்தியோகத்தர்	திருமதி. டீ.ரீ. விஜேரத்ன
17.	கணக்காய்வாளர்கள்	கணக்காய்வாளர் நாயகம்
18.	வங்கியாளர்கள்	இலங்கை வங்கி சம்பத் வங்கி தேசிய அபிவிருத்தி வங்கி
19.	பதிவு செய்யப்பட்ட அலுவலகம்	இல, 42 நவம் மாவத்தை, கொழும்பு 02

இலங்கை ஏற்றுமதி செயலாற்றுகை 2020

1. இலங்கை ஏற்றுமதி செயலாற்றுகை 2020

முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் இலங்கையில் வர்த்தகப் பொருள் ஏற்றுமதி சம்பாத்தியம் ஐ.அ.டொலர் 10,077 மில்லியன் வரை 15.6 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.


சம்பாத்தியம் குறைவடைந்த பிரதான ஏற்றுமதிகள்

- புடவைகள் மற்றும் ஆடைகள் (21.01%)
- தேயிலை (7.83%)
- இறப்பர் மற்றும் இறப்பர் சரர்ந்த உற்பத்திகள் (9.66%)
- மின்னியல் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் (13.87%)


சம்பாத்தியங்களில் வளர்ச்சியை பதிவுசெய்துள்ள உற்பத்திகள்

- தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகள் (8.27%)
- வாசனைத் திரவியங்கள் மற்றும் செறிவூட்டல், (7.12%)
- ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள் (49.27%)

1.1 இலங்கையின் மாதாந்த வர்த்தகப் பொருள் ஏற்றுமதிச் செயலாற்றுகை



1.2. வர்த்தகப் பொருள் ஏற்றுமதிகளின் இணைப்பாக்கம் 2020



2019 மற்றும் 2020 ஆண்டுகளில் ஏற்றுமதிகள் பற்றிய ஒப்பீடு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. இலங்கையின் வர்த்தகப் பொருள் ஏற்றுமதியில் 62.5% சதவீதம் 10 பிரதான ஏற்றுமதி இடங்களை மையப்படுத்தியுள்ளது. ஐக்கிய அமெரிக்க தனியிடம் என்றவகையில் மொத்த ஏற்றுமதியில் 24.95% சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்கின்றது.

1.3 இலங்கையின் 10 பிரதான ஏற்றுமதி இடங்கள்

	நாடு	2019 சன-டிச (ஐ.அ.டொ.மில்)	2020 சன-டிச (ஐ.அ.டொ.மில்)	% வளர்ச்சி	2020 ஏற்றுமதியின் சதவீதம் %
1	ஐக்கிய அமெரிக்கா	3139.49	2,507.20	-20.14	24.88
2	ஐக்கிய இராச்சியம்	997.90	910.47	-8.76	9.04
3	இந்தியா	758.97	604.50	-20.35	6.00
4	ஜேர்மன்	645.74	570.39	-11.67	5.66
5	இத்தாலி	531.06	457.32	-13.89	4.54
6	பெல்ஜியம்	352.14	295.48	-16.09	2.93
7	நெதர்லாந்து	300.89	290.17	-3.56	2.88
8	சீனா	229.06	223.00	-2.65	2.21
9	கனடா	240.49	213.05	-11.41	2.11
10	துருக்கி	209.58	208.38	-0.57	2.07
	ஏனைய சந்தைகள்	4534.68	3,767.34	-16.93	37.50
	மொத்தம்	**11,940.00**	**10,047**	**-15.60**	**100.00**

மூலம்: இலங்கைச் சுங்கம் / இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

2019 மற்றும் 2020 ஆண்டுகளில் ஏற்றுமதி பற்றிய ஒப்பீடு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. இலங்கையின் மொத்த வர்த்தகப் பொருள் ஏற்றுமதிகள் 31.58% சதவீதத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் பங்களிப்புச் செய்கின்ற அதேவேளையில், ஐக்கிய அமெரிக்கா மொத்த ஏற்றுமதியில் 24.88% சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

1.4 இலங்கையின் ஏற்றுமதி பிராந்தியங்கள்


பிராந்தியம்	2019 சன-டிச (ஐ.அ.டொ.மில்)	2020 சன-டிச (ஐ.அ.டொ.மில்)	% வளர்ச்சி	2020 ஏற்றுமதியின் சதவீதம் %
ஐரோப்பிய ஒன்றியம்	3,548.87	3,182.06	-10.34	31.58
ஐக்கிய அமெரிக்கா	3,139.49	2,507.20	-20.14	24.88
தென் ஆசியா	1,123.83	916.17	-18.48	9.09
ஆசிய நாடுகள்	407.10	283.44	-30.38	2.81
சுதந்திரம் பெற்ற பொதுநலவாய நாடுகள்	275.27	269.66	-2.04	2.68
ஆபிரிக்க நாடுகள்	258.04	245.83	-4.73	2.44
மத்திய கிழக்கு நாடுகள் (சைப்ரஸ் மற்றும் எகிப்து தவிர்ந்த)	904.82	708.59	-21.69	7.03
ஏனையவை	2282.58	1,934.05	-15.27	19.25
மொத்தம்	**11,940.00**	**10,047**	**-15.85**	**100.00**

மூலம்: இலங்கைச் சுங்கம் / இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

1.5 சேவை ஏற்றுமதிகள்

கடந்த வருடத்தில் தொடர்புடைய கால எல்லையில் பதிவாகிய பெறுமதியாகிய ஐ.அ.டொலர் 3,888 உடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் வர்த்தக செயற்பாடுகளை வெளிவாரியாக நிறைவேற்றிக் கொள்ளல் (ஐஊவு.்.டீஆ), நிர்மாணம், நிதிச் சேவைகள், போக்குவரத்து மற்றும் வழங்கல் சேவைகள் உள்ளடங்கிய சேவை ஏற்றுமதிகள் மூலம் கிடைத்த சம்பாத்தியம் ஐ.அ.டொ 2.976 மில்லியன் வரை அண்மித்துள்ளது என ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் தொடர்புடைய காலப் பகுதியுடன் ஒப்பிடும் போது 2020 சனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் மதிப்பீடு செய்யப்பட்ட சேவை ஏற்றுமதி 23.46மூ சதவீதம் வரை குறைவடைந்துள்ளது.

1.6 திருத்தப்பட்ட ஏற்றுமதி எதிர்வுகூறல் மற்றும் அடைந்துள்ள முன்னேற்றம்



2020 ஆம் ஆண்டுக்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் திருத்தப்பட்ட ஏற்றுமதி எதிர்வுகூறலாகிய ஐ.அ.டொலர் 13.39 பில்லியனில் ஐ.அ.டொ 9.57 பில்லியன் வர்த்தகப் பொருள் ஏற்றுமதியின் மூலமும் ஐ.அ.டொ 3.82 பில்லியன் சேவை ஏற்றுமதியின் மூலமும் எதிர்பார்க்கப்பட்டது. 2020 சனவரி இமுதல் டிசம்பர் வரையான காலப்பகுதியல் ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதிக்காக மதிப்பீடு செய்யப்பட்ட சேவை ஏற்றுமதி உட்பட ஐ.அ.டொ 12.34 பில்லியன் ஏற்றுமதி சம்பாத்தியம் பதிவாகியுள்ளது. அது திருத்தப்பட்ட ஏற்றுமதி எதிர்வுகூறலின் 92.16மூ சதவீத முன்னேற்றமாகும்.

மேலும் 2020 சனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் வர்த்தகப் பொருட்கள் மற்றும் சேவை ஏற்றுமதிகள் மூலம் கிடைத்த சம்பாத்தியம் முறையே 104.97 மற்றும் 59.96மூ சதவீத முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

1.7. 2020 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட ஏற்றுமதி எதிர்வுகூறல் மற்றும் அடைந்து கொண்ட முன்னேற்றம்

உற்பத்தி	ஏற்றுமதி எதிர்வுகூறல் (ஐ.அ.டொ. மில்.)	ஏற்றுமதிகள் 2020 ஐ.அ.டொ. மில்.	அடைவு வீதம் %
ஆடை	4,109 *	4,405.84	107.22
தேயிலை	996	1,240.94	124.59
இறப்பர் மற்றும் இறப்பர் அடிப்படையிலான உற்பத்திகள்	686	816.17	118.98
தெங்கு மற்றும் தெங்கு அடிப்படையிலான உற்பத்திகள்	538 *	664.54	123.52

உற்பத்தி	ஏற்றுமதி எதிர்வுகூறல் (ஐ.அ.டொ. மில்.)	ஏற்றுமதிகள் 2020 ஐ.அ.டொ. மில்.	அடைவு வீதம் %
வைரம், இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள்	233	148.23	63.62
மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொருட்கள்	322	328.28	101.95
வாசனைத் திரவியங்கள் மற்றும் செரிவு எண்ணெய்	300 *	335.47	111.82
உணவு மற்றும் குடிபானங்கள்	325	351.36	108.11
கடலுணவு	188	189.80	100.96
அலங்கார மீன்	11	13.03	118.45
மரக்கறிகள் மற்றும் பழங்கள்	52	61.34	117.96
ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள்	69	67.59	97.96
பூக்கள் மற்றும் இலைகள்	13	12.61	97.00
வள்ளங்கள் கட்டுதல்	53	2.39	4.51
பெற்றோலிய உற்பத்திகள்	376	271.80	72.29
ஏனைய வர்த்தகப் பொருள் ஏற்றுமதிகள்	1,300	1,137.61	87.51
மொத்த வர்த்தகப் பொருள் ஏற்றுமதிகள்	**9,571**	**10,047**	**104.97**
ICT/ BPM	1,600 *	1,011	63.19
நிர்மாணம்	74 *	7	9.46
நிதிச் சேவைகள்	292	96	32.88
போக்குவரத்து மற்றும் வழங்கல் சேவை	1,850	1,174	63.46
மொத்த சேவைகள் ஏற்றுமதி	3,816	2,288	59.96
மொத்த பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி	**13,387**	**12,335**	**92.14**

மூலம்: இலங்கைச் சுங்கம் / இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

***கைத்தொழில் பின்னூட்டல்**

2. 2020 சனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியல் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றங்கள்

2.1 சந்தை அபிவிருத்தி

2.1.1 சர்வதேச சந்தைக் கண்காட்சிகளுக்காக இலங்கையின் பங்குபற்றுதல்

இந்தக் கண்காட்சிகளின் வர்த்தக கூடங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன:

- 27 கம்பனிகளின் பங்குபற்றுதலுடன் 2020 பெப்ரவரி 16 முதல் 20 ஆம் திகதி வரை இடம்பெற்ற GULFOOD 2020 கண்காட்சியில் ஐ.அ.டொ. 4.5 மில்லியன் பெறுமதியைக் கொண்ட கட்டளைகளை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.
- 2020 பெப்ரவரி 16 முதல் 20 ஆம் திகதி வரை ஜேர்மனியின் நிவ்ரம்பேர்க் நகரில் இடம்பெற்ற BIOFACH 2020 கண்காட்சியில் இலங்கையின் சேதன விவசாய உற்பத்தியை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் சந்தைகள் மேம்படுத்துவதற்காக 14 நாடுகள் பங்குபற்றுதலுடன் ஐ.அ.டொலர் 16 மில்லியன் பெறுமதியைக் கொண்ட கட்டளைகளை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.
- 2020 சனவரி 18 முதல் 26 ஆம் திகதிவரை ஜேர்மனியில் இடம்பெற்ற DUSSELDORF BOAT SHOW 2020 கண்காட்சிக்காக 03 கம்பனிகள் பங்குபற்றிய அதேவேளையில், ஒத்துழைப்பு வர்த்தகமாக இலங்கையின் உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கு ஆர்வத்தை வெளிப்படுத்திய நெதர்லாந்தின் உற்பத்தி பங்குதாரர் ஒருவருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஒரு கம்பனிக்கு வாய்ப்புக் கிடைத்தது.





- மூன்றாவது China International Import Exposition (CIIE) 2020 இல் தொழில்முயற்சி வியாபார மேடைகள்
  - உணவு மற்றும் விவசாயத் துறையில் 6 கம்பனிகளும் நுகர்வுப் பொருள் துறையில் ஒரு கம்பனியின் பிரதிநிதிகள் ஊடாக இலங்கை வியாபார கண்காட்சிக் கூடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
  - தெங்கு, வாசனைத் திரவியங்கள், தாவர உற்பத்திகள், இனிப்புப் பண்டங்கள் மற்றும் பிஸ்கட் போன்ற சாத்தியமுள்ள ஏனைய தயாரிப்புகளை மேம்படுத்துவதற்காக உணவு மற்றும் விவசாய துறையின்



கீழ் 18 சதுரமீற்றர் அளவைக் கொண்ட இலங்கை தூதரகத்தின் கண்காட்சிக்கூடம் ஒழுங்கு செய்யப்பட்டது.

- கண்காட்சியின் போது சுமார் ஐ.அ.டொ 5000 இற்கு விறபனை இடம்பெற்றது.
- இலங்கையின் மூன்று கம்பனிகளுக்கும் கெப்பிடரல் கம்பனிக்கும் இடையில் 5.5 பில்லியன் யுவான் பெறுமதியைக் கொண்ட உபாயத்திட்ட ஒத்துழைப்பு உடன்படிக்கைகள் மூன்று கைச்சாத்திடப்பட்டன.
- மூன்றாவது CIIE 2020 இணையாக பேன்க்ஒப் சைனா உடன் நிகழ்நிலையில் தொடர்பு கொள்ளும் நிகழ்வொன்று ஒழுங்கு செய்யப்பட்டது (பங்குபற்றிய மொத்த வாடிக்கையாளரின் எண்ணிக்கை 20, மொத்த வியாபாரக் கலந்துரையாடலின் எண்ணிக்கை 39 மற்றும் வாங்குனருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் எண்ணிக்கை 10)

2.1.2 நாட்டில் இருந்து வெளியில் சென்ற/ நாட்டுக்குள் வருகைதந்த வர்த்தகத் தூதுக் குழுக்கள்

பின்வருமாறு B2B வர்த்தக கலந்துரையாடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

தெங்கு மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்திகள்

- **ஜப்பான் தென்னம் தும்பு மற்றும் சிரட்டை கரி** - இலங்கையின் 4 கம்பெனிகளுக்கு ஜப்பான் நாட்டின் வாங்குனரொருவர் அறிமுகப்படுத்தப்பட்டார். இரண்டு கம்பெனிகளில் மாதிரிகள் அனுப்பப்பட்ட அதேவேளையில் ஒரு கம்பெனிக்கு ஐ.அ.டொலர் 3880.00 பெறுமதியை கொண்ட கட்டளை கிடைக்கப்பெற்றன.
- **ஐக்கிய ராஜ்யம் - தென்னம் பால் மற்றும் வெண்ணிலா** - இலங்கையின் 05 கம்பெனிகளுக்கு ஐக்கிய ராச்சியத்தின் வாங்குனரொருவர் அறிமுகப்படுத்தப்பட்டார். மாதிரிகள் அனுப்பப்பட்டுள்ள அதேவேளையில் வாங்குனரின் பதில் கிடைக்கும் வரை எதிர்பார்த்து இருக்கின்றனர்.
  துருக்கி காய்ந்த தேங்காய் தென்னம் தும்பு மற்றும் சுழற்சி காபன் மற்றும் வெள்ளை தேங்காய் எண்ணெய் - துருக்கி நாட்டின் 13 வாங்குனர்களுக்காக இலங்கையின் 33 கம்பெனிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கையின் விலை மிக அதிகமானது என்பது பெரும்பாலான வாங்குனர்களின் அபிப்பிராயமாகும். வர்த்தக கலந்துரையாடலின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் பல கம்பெனிகளினால் துருக்கி அரசாங்கத்தின் கருத்திட்டத்திற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட தென்னம் தும்பு உற்பத்திகளை வழங்குவதற்காக துருக்கி நாட்டின் பங்குதாரர் ஒருவருடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றன.

<u>வாசனை திரவியங்கள் மற்றும் செறிவுப் பொருட்கள்</u>

- அமெரிக்கா வாங்குபவர்களுடனும் 12 ஏற்றுமதி நிறுவனங்களுடனும் B2B கூட்டங்கள் நடத்தப்பட்டது. மாதிரிகள் அனுப்பப்பட்டதுடன் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.
- ஜப்பான், ஐக்கிய இராச்சியம் மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகியவற்றுடன் 3 இணைய தளத்தை அடிப்படையாக கொண்ட கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.
- 12 ஏற்றுமதியாளர்கள் மற்றும் 7 போலந்து வாங்குபவர்களுடன் B2B கூட்டத்திற்கு வசதி செய்யப்பட்டது.
- ஜோர்டானுடனான B2B கூட்டத்திற்கு 3 ஏற்றுமதியாளர்களை அறிமுகப்படுத்தியது.
- இலங்கை கருவாவுக்கான புவியியல் குறிகாட்டி

- இலங்கை கருவாவுக்கான கண்டுபிடிப்பு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையை நிறுவுதல்.
- புவியல் குறிகாட்டி சங்கத்தின் செயற்பாட்டைக் கண்காணித்தல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையை செயல்படுத்துதல்.
- DEA உடன் தொடர்புகொள்வதில் வெளிப்புற கட்டுப்பாட்டு பொறிமுறையை செயல்படுத்துதல்.
- பொது மக்கள் கருத்துக்களுக்காக 2020 ஜூன் மாதம் ஐரோப்பிய ஒன்றிய இதழில் 'இலங்கை கருவா' புவியியல் குறிகாட்டி பயன்பாட்டை வெளியிட்டது.

ஆடைத் துறை

- பிரான்சில் உள்ள இலங்கை தூதரகத்துடன் இணைந்து 9 இலங்கை ஆடை நிறுவனங்களுக்காக லாகோஸ்ட்- பிரான்சுடன் B2B கூட்டம் நடத்தப்பட்டது.. கட்டளைகளைச் செயல்முறைப்படுத்துவதற்காக தனிப்பட்ட நிறுவனங்கள் லாகோஸ்டுடன் தொடர்பு கொள்கின்றன.
- 6 இலங்கை ஆடை நிறுவனங்களுக்கு 3 போலந்து வாங்குபவர்களுடன் B2B கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

வள்ளம் கட்டுதல்

- மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க பிராந்தியத்தில் உள்ள இலங்கை தூதரகங்களின் பிரதிநிதிகளுக்காக வள்ளம் கட்டும் துறையில் 2 இணைய தளத்தை அடிப்படையாக கொண்ட கருத்தரங்குகள் ஜூலை மாதம் ஏற்பாடு செய்யப்பட்டன.
- ஸ்வீடன் வாங்குபவர் மற்றும் வள்ளம் கட்டும் துறையின் பிரதிநிதிகளுடன் இணைய தளத்தை அடிப்படையாக கொண்ட கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. மேலும் ஒரு வள்ளம் கட்டும் நிறுவனத்துடன் சாத்தியமான ஒத்துழைப்புகள் குறித்து கலந்துரையாடல்கள் நடைபெறுகின்றன.
- ஓமன் வாங்குபவருடன் B2B கூட்டம், 03 வள்ளம் கட்டும் நிறுவனங்களுக்கு அல் ∴பிரூஸ் குழுமத்துடனான கூட்டம் நடைபெற்றது.
- 04 வள்ளம் கட்டும் நிறுவனங்களுக்காக ஓமான் அல் ஹிலால் குழும நிறுவனங்களுடன் B2B கூட்டம் நடைபெற்றது. ஓமான் வாங்குபவருடன் சாத்தியமான ஒத்துழைப்புக்காக தனிப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட திட்டங்கள் ஓமானில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு அனுப்பப்பட்டன. வாங்குபவர்களுடன் தொடர்செயல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன
- துருக்கி வாங்குபவர் மற்றும் இலங்கை வள்ளம் கட்டும் நிறுவனத்துடன் B2B கூட்டம் துருக்கியில் உள்ள இலங்கை தூதரகத்துடன் ஒருங்கிணைந்து நடைபெற்றது. சாத்தியமான ஒத்துழைப்புகள் குறித்த முன்மொழிவு வாங்குபவருக்கு அனுப்பப்பட்டது மற்றும் வாங்குபவருடன் தொடர்செயல் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றது.

மட்பாண்ட மற்றும் கணிப் பொருள் அடிப்படையிலான தயாரிப்புகள்

- கம்பனியின் பிரதிநிதிகள் மற்றும் அமெரிக்கா தூதரக அதிகாரிகளுடன் ஒரு நிகழ்நிலை கூட்டம் நடைபெற்றது.
- இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளின் அதிகாரிகளுடன் நிகழ்நிலை கூட்டம் ஜூலை மாதம் நடைபெற்றது. கூட்டத்தில் 5 இலங்கை நிறுவனங்கள் பங்கேற்றன. 3 நிறுவனங்களுடன் தொடர்செயல் தொடர்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இலங்கையில் உருவாக்கப்பட்ட கிராபெனின் அடிப்படையிலான ஊருக்கு அமில மின்கலம் மற்றும் லித்தியம் அயன் மின்கலம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக TOYOTA மற்றும் தாய்லாந்தை தளமாகக் கொண்ட பானாசோனிக் பிரதிநிதிகள், தாய்லாந்தின் இலங்கை தூதரக அதிகாரிகள், SLINTEC, சிலோன் கிராபென் டெக்னாலஜிஸ் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் ஒரு நிகழ்நிலை கூட்டம் நடைபெற்றது. தனிப்பட்ட நிறுவனங்கள் இலங்கை தூதரகங்கள் மற்றும் அந்தந்த நாடுகளில் வாங்குபவர்களுடன் தொடர்பு கொள்கின்றன.

மின்னியல் மற்றும் இலத்திரனியல் ஆக்கக்கூறுகள்

- சென்னை, இந்தியா, மும்பை, புதுடெல்லி, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய 8 வெளிநாட்டு தூதரகங்களுடன் ஒரு தகவல் சார்ந்த இணைய தளத்தை அடிப்படையாக கொண்ட கருத்தரங்கு. ஏற்கனவே ஒப்பந்தங்கள் பெறப்பட்டுள்ளன- ஐ.அ.டொலர் 1.6 மில்லியன் (2016 முதல் 2018 வரை). ஐ.அ.டொலர் 4 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்களின் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றன.
- சிங்கப்பூர் தூதரகம் டிஜிட்டல் மேம்பாட்டுக்காக 15 இலங்கை நிறுவனத்தின் சுயவிவரங்களை தங்கள் இணையத்தள போர்ட்டலில் வெளியிட ஏற்பாடு செய்துள்ளது. 2021 இற்குள் 0.8 மில்லியன் அமெரிக்க டொலர் வணிக இணைப்புகளை உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்றன.
- 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 05 முதல் 09 வரை இந்திய மின்னியல் மற்றும் இலத்திரனியல் உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் (IEEMA) ஒரு மெய்நிகர் B2B அமர்வு ஒழுங்குசெய்யப்பட்டது.
  மின்னணு ஏற்றுமதியாளர்களுக்கான ஜெர்மனி மற்றும் ஐரோப்பாவில் சந்தை வாய்ப்புகள் குறித்த இணைய தளத்தை அடிப்படையாக கொண்ட கருத்தரங்கு - ஏற்கனவே ஒப்பந்தங்கள் பெறப்பட்டன- ஐ.அ.டொலர் 2.7 மில்லியன் (2019 முதல்). ஐ.அ.டொலர் 12 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தங்களின் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றன.

பல்வேறு தயாரிப்புகள்

- 2020 பெப்ரவரி மாதத்தில் எகிப்து மற்றும் ஜோர்டானில் உள்ள இலங்கை தூதரகங்களுடன் இணைந்து ஒரு வெளிச் செல்லும் குழுவை ஏற்பாடு செய்தது. 9 இலங்கை நிறுவனங்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றன. ஒரு நிறுவனம் ஏற்கனவே ஜோர்டானில் ஒரு புதிய வாங்குனருக்கு வழங்கல் செய்துள்ள அதேவேளையில் தற்போது ஜோர்டானுக்கு கரிம தேயிலை ஏற்றுமதி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. ஏனைய நிறுவனங்கள் வாங்குபவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.
- போலந்தில் ஈ-வர்த்தக வாரம் - 19 இலங்கை நிறுவனங்கள் பங்கேற்றன. வாசனைத் திரவியங்கள், தேங்காய் உள்ளீட்டுப் பொருட்கள் மற்றும் ஆடைத் துறைகளுக்காக போலந்திலிருந்து 10 வாங்குனர்களுடன் 24 கூட்டங்கள் நடாத்தப்பட்டன. 2 நிறுவனங்கள் தங்கள் சோதனை கட்டளைகளை அனுப்பியுள்ளன. ஏனைய நிறுவனங்கள் வாங்குபவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.
- பிரேசில் மற்றும் சிலியில் ஆடை, பியர், வாசனைத் திரவியங்கள், மற்றும் தேயிலை துறைகளுக்காக மொத்தம் 26 B2B கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.
- ஒரு நிறுவனம் சிலியில் இருந்து கயிறு இழைக்கான உறுதிப்படுத்தப்பட்ட வணிக கட்டளைகளைப் பெற்றது.
- சிங்கப்பூருடனான B2B நிகழ்ச்சித் திட்டம் 2020.09.25 அன்று நடைபெற்றது.- 10 இலங்கை நிறுவனங்கள் பங்கேற்றன. - சிங்கப்பூரிலிருந்து 6 வாங்குபவர்கள். நிகழ்நிலைத் தளம். -3 இலங்கை நிறுவனங்கள் அந்த இடத்திலேயே வெற்றிகரமாக கலந்துரையாடின.

- நேபாளத்திற்கான B2B கூட்டங்கள் - தங்கொட்டுவ பீங்கான் மற்றும் நோரிடேக் லங்கா பீங்கான் பிரைவேட் லிமிடெட் எக்பன நேபாள நிம்பஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டது
- பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் B2B கூட்டங்கள். பீங்கான், இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள், பதப்படுத்தப்பட்ட உணவு, வாசனைத் திரவியங்கள் மற்றும் மூலிகை அழகுசாதனப் பிரிவுகளைச் சேர்ந்த 35 நிறுவனங்களின் சுயவிவரங்கள் மற்றும் நிறுவனத்தின் பிரசுரங்களை அனுப்பியது.
- சீனாவின் குன்மிங் நகரில் நிகழ்நிலையில் நடைபெற்ற China South Asia Expo - 2020 டிசம்பர் 12 முதல் 18 வரை சீனாவின் குன்மிங் நகரில் நடைபெற்ற இந்த மெய்நிகர் கண்காட்சியில் இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள், கைவினைப்பொருட்கள், பதப்படுத்தப்பட்ட உணவு ஆகியவற்றை 52 நிறுவனங்கள் பிரதிநிதித்துவப்படுத்தியது.
- துருக்கியின் வெளிநாட்டு பொருளாதார உறவுகள் சபையின் (DEIK) ஒத்துழைப்புடன் ‘‘துருக்கிக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட வணிகத் தொடர்கள்’’ சம்பந்தமான இணையத்தள அடிப்படையிலான கருத்தரங்கை ஏற்பாடு செய்தது, அதைத் தொடர்ந்து 2 நாடுகளின் தனியார் துறைக்கு இடையிலான துறைசார் பரஸ்பர அமர்வுகள் நடைபெற்றன. உணவு மற்றும் பானங்கள், ரப்பர் தயாரிப்புகள், நூல், செயல்படுத்தப்பட்ட கார்பன், ஆயுர்வேத தயாரிப்புகள் மற்றும் கோகோ-பீட் மற்றும் கட்டுமானத் துறைகளில் இருந்து 88 இலங்கை நிறுவனங்கள் பங்கேற்றன.

2.1.3 சாத்தியவள ஆய்வுகள் / சந்தை நுண்ணறிவு

- COVID 19 விளைவுகள் மற்றும் சந்தைகளில் உள்ள வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்களின் ஆதரவுடன் 59 சந்தை அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு EDB இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன.
- மீன்பிடித் துறைக்கு ஐரோப்பாவிற்கான சந்தை அறிக்கையை நிறைவு செய்தது.
- சந்தை அறிக்கைகள் வர்த்தகத் திணைக்களம் மற்றும் வெளியுறவு அமைச்சுடன் இணைந்து உருவாக்கப்பட்டு தொழில்துறை பங்குதாரர்களிடையே பரப்பப்பட்டு வாசனைத் திரவியங்கள் மற்றும் செறிவுகளுக்கான (ரஷ்யா, கனடா மற்றும் ஐ.அ.எமிரேட்) EDB இணையதளத்தில் வெளியிடப்பட்டன.
- ருமேனியா மற்றும் ஸ்லோவாக்கியா டெஸ்க் சந்தை ஆய்வுகளை பூர்த்தி செய்து EDB வலைத் தளத்தில் வெளியிடப்பட்டது.
- ஐக்கிய அமெரிக்க GSP+ செயலெல்லை விரிவாக்க பொருத்தமான தயாரிப்புகளை அடையாளம் காண புள்ளிவிவர பகுப்பாய்வு மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- இந்த கருவியைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட புள்ளிவிவர அறிக்கைகள் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள், ஏற்றுமதியாளர்கள் உள்ளிட்ட தொடர்புடைய பங்குதாரர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.
- ஒரு ஆழமான ஆய்வு மற்றும் ‘‘உள்நாட்டு கைத்தொழில் வளர்ச்சிக்கான மாற்று கட்டமைப்பை இறக்குமதி செய்தல்’’ பற்றிய அறிக்கை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்பட்டது.

2.1.4 வெளிப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்

- இறக்குமதி மேம்பாட்டு மேடை (IPD) செயலமர்வு - இறக்குமதி மேம்பாட்டு மேடை (IPD) ஜெர்மனி 2020 உடன் இணைந்து வெளிப்பாடு திட்டம்.
- SIAL-2020 ஐ மையமாகக் கொண்ட முன்-கண்காட்சி செயலமர்வுக்கு ஒரு குறிப்பிட்ட வீதி வரைபடத்தை விருத்திசெய்வதற்கு 15 EDB அதிகாரிகளுக்காக இரண்டு நாள் செயலமர்வு நடாத்தப்பட்டது.

- நடவடிக்கைகளை பின்தொடர்வதற்காக EDB குழுவிற்காக IPD நிபுணரால் நடத்தப்பட்ட 5 மெய்நிகர் கூட்டங்கள் மற்றும் விளக்கக்காட்சியை உருவாக்கியது.
- SIAL-2020 இல் பங்கேற்பை இரத்து செய்ததன் காரணமாக 2021 வர்த்தக கண்காட்சிகளுக்கு முன்-கண்காட்சி செயலமர்வு மீண்டும் திட்டமிடப்பட்டுள்ளது
- 'மெய்நிகர் B2B கூட்டத்தை எவ்வாறு தயாரிப்பது மற்றும் நடத்துவது' மற்றும் மெய்நிகர் B2B திட்டத்திற்கு ஏற்றுமதியாளர்களை எவ்வாறு தயார்செய்வது என்பது குறித்து IPD ஆலோசகர்களால் IPD ஆலோசகர் நடத்திய இரண்டு நிகழ்நிலைக் கருத்தரங்குகள்.
- 40 EDB அதிகாரிகளுக்கான ''வர்த்தக கண்காட்சிகள் அமைப்பு" குறித்த செயலமர்வு ஒன்றை நடத்தியது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட 33 மலர் வளர்ப்பு விவசாயிகள் மற்றும் ஏற்றுமதி நிறுவனத்தின் பங்கேற்புடன் 2020 ஜனவரி 14 ஆம் திகதி நடைமுறையை செய்துகாட்டுவதற்கான ஒரு செயலமர்வு நடைபெற்றது.

2.1.4 ஏனைய சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

- சீனாவில் B2B மற்றும் B2B ஈ-வர்த்தகத் தளமான www.womai.com இல் இலங்கை மற்றும் தனியார் துறை நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக சீனாவின் COFCO Womai Investment Pvt Ltd உடன் EDB ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- தேங்காய் மற்றும் தேங்காய் சார்ந்த தயாரிப்புகளை மேம்படுத்துவதற்காக ஈ-விளம்பர பொருட்களின் தொகுப்பு இலங்கை தூதரகங்களுடன் விருத்திசெய்து மற்றும் பகிரப்பட்டுள்ளது.
- இலங்கை ஆரோக்கிய சுற்றுலா சங்கத்துடன் இணைந்து EDB 2020 ஜூலை 03, 07 மற்றும் 10 ஆம் தேதிகளில் இலங்கை ஆரோக்கிய சுற்றுலா சேவைகளை சர்வதேச அளவில் ஊக்குவிப்பதற்காக மூன்று தொடர் வெபினார்கள் ஏற்பாடு செய்யப்பட்டது. 4 தேசிய மற்றும் சர்வதேச ஆரோக்கியம் தொடர்பான வல்லுநர்கள் வள நபர்களாக அழைக்கப்பட்டதுடன் இந்த மூன்று வெபினாரில் கிட்டத்தட்ட 700 தேசிய / சர்வதேச பங்கேற்பாளர்கள் பங்கேற்றனர். மேலும், இந்த மூன்று தொடர்களும் டிஜிட்டல் மீடியா மற்றும் தோராயமாக வெளியிடப்பட்டன. ஆண்ணளவாக 50,000 ஆரோக்கிய தேடுபவர்கள் இணையம் வழியாக அமர்வுகளைப் பின்பற்றியுள்ளனர்.
- தளபாடத் துறைக்கு ஐரோப்பிய தென்னாப்பிரிக்காவின் தூர கிழக்கு ஆசியாவில் உள்ள இலங்கை தூதரகங்களை இணைக்கும் இரண்டு வெபினார்கள் நடத்தப்பட்டன. இந்தியா மற்றும் தென்னாப்பிரிக்க தூதரகங்கள் தங்கள் சந்தைகளில் வணிக இணைப்புகளை உருவாக்க ஆர்வம் காட்டியுள்ளன.
- தளவாடத் துறைக்கு 2 வெபினார்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. தூர கிழக்கு ஆசியா, ஐரோப்பா மற்றும் தென்னாப்பிரிக்காவிற்காக நடாத்தப்பட்ட இரண்டு வெபினாரில் மைய இயக்குனர்களுக்கு தங்கள் திறன்களை வெளிப்படுத்த வாய்ப்பு வழங்கப்பட்டது. இதன் விளைவாக, டிசம்பர் 16 ஆம் திகதி இந்தியாவில் இந்திய ஏற்றுமதியாளர்கள் கூட்டமைப்பு (FIEO) உடன் B2B கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. வெபினாரைப் பின்தொடர்வது போல, இலங்கையில் லாஜிஸ்டிக் தொழில் குறித்து ஒரு சிறிய ஆக்கத்தை வெளியிட FIEO ஒப்புக்கொண்டது.
- மூலிகை ஒப்பனை தயாரிப்புகளுக்கான இலங்கை தரத்தை வளர்ப்பது மற்றும் மருத்துவ பரிசோதனைகளை செயல்படுத்துவதில் பணியாற்றுதல்.
- இலங்கை ஆயுர்வேத தயாரிப்புகளுக்கான தரங்களை வளர்ப்பதில் பணியாற்றுதல்.
- ஆயுர்வேதம் மற்றும் மூலிகை ஒப்பனைத் துறைக்கு ஜப்பான், இங்கிலாந்து மற்றும் தென்னாப்பிரிக்காவுக்கு 3 வெபினார்கள் நடாத்தப்பட்டன.

- ஜப்பான் மற்றும் இங்கிலாந்தில் வாங்குபவரைத் தொடர்புகொள்ளப்பட்டனர். மூலிகை ஒப்பனை பொருட்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து Holland & Barrant இற்கு மாதிரிகள் அனுப்பப்பட்டன.
- சாப்பிடுவதற்கு தயாராகவுள்ள உறைந்த பொருட்கள் தயாரிப்பு மற்றும் சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்.
- 17 சந்தை எச்சரிக்கைகள் வெளியிடப்பட்டன.
- இலங்கையின் அச்சிடும் தொழில் குறித்த ஒவ்வொரு தூதுக்குழுக்களினதும் அதிகாரிகளின் விழிப்புணர்வை ஏற்படுத்த 5 வெளிநாட்டு தூதரகங்களுடன் தகவல்சார்ந்த வலைநார் நடத்தியது. செயல்பாட்டின் விளைவாக, புதுதில்லியில் இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தின் ஆதரவுடன் இந்தியாவில் இருந்து 2 வாங்குபவர்களுடன் B2B கூட்டங்களை நடத்தியது. சிங்கப்பூரில் உள்ள இலங்கை தூதரகங்களின் ஆதரவோடு 16 இலங்கை நிறுவனங்கள் PrintPack+Sign 2020 (2020 அக்டோபர் 28 முதல் 30 வரை) இல் பங்கேற்க உதவியது.
- இறுதிப்படத்தப்பட்ட என்ட்ரெபோட் வர்த்தக நடைமுறை இலங்கை சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடம் அவர்களின் அவதானிப்புகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- ஓமனில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் ஓமான் சந்தையில் இலங்கை உணவு தயாரிப்புகளை மேம்படுத்துவதற்காக SPAR சூப்பர் மார்க்கெட் சங்கிலியுடன் பணியாற்றினார். 15 இலங்கை நிறுவனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- சேதன / நாளாந்தம் தேவைப்படுகின்ற தயாரிப்புகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு பெல்ஜியத்தில் உள்ள இலங்கை தூதரகத்துடன் பணியாற்றினார். 08 நிறுவனங்களின் மாதிரிகள் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டன. உணவு இறக்குமதியாளருடன் 04 இலங்கை நிறுவனங்களுடன் ‘‘மூன்று ஒன்றுக்கு ஒன்று” என்ற ஒரு கூட்டம் நடத்தப்பட்டது.
- ஒரு அமெரிக்கா வாங்குபவர் மற்றும் 07 இலங்கையின் உணவு பொருட்கள் ஏற்றுமதி நிறுவனங்களுடன் B2B ஏற்பாடு செய்யப்பட்டது.
- ஒரு சூப்பர்.்புட் (பலாப்பழம்) ஏற்றுமதி நிறுவனத்திற்கு இங்கிலாந்து வாங்குபவரை அறிமுகப்படுத்தியது.
- Grow Pot உபாயத்திட்டம் மற்றும் Foreign Investor Out Reach உபாயத்திட்டம் மூலம் பின்வரும் துறைகளில் EDB-BOI கூட்டு பணிக்குழு குழுவின் கீழ் முதலீட்டாளர்களை BOI உடன் இணைந்து அழைப்பதற்கான முன்மொழிவுகளை அடையாளம் கண்டு விருத்திசெய்தல்.
  - ✓ ரப்பர் துறை (டயர்கள் (திண்ம மற்றும் வாயு), வாகன உதிரிப் பாகங்கள்)
  - ✓ நேர்த்தியான ஆடை மற்றும் தனியாள் பாதகாப்பு உபகரணங்கள் (PPE)
  - ✓ மின்னியல் மற்றும் இலத்திரனியல்
  - ✓ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
  - ✓ கனிம அடிப்படையிலான தயாரிப்புகள் (கிராபெனின் மற்றும் தொடர்புடைய தயாரிப்புகள்)
  - ✓ உணவு பதப்படுத்தும்முறை
  - ✓ மருந்துத் துறை

3. வழங்கல் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி

- காலணி மற்றும் தோல் கண்காட்சியின் 12 வது பதிப்பு 2020 பிப்ரவரி 07 முதல் 09 வரை BMICH இல் நடைபெற்றது. சுமார் 25,000 பேர் இந்த கண்காட்சியை பார்வையிட்டனர். 101 உள்ளூர் கண்காட்சியாளர்களும் 27 வெளிநாட்டு கண்காட்சியாளர்களும் தங்கள் தயாரிப்புகளை 225 காட்சிக் கூடங்களில் காட்சிப்படுத்தினர். 10 SMEக்கள் தங்கள் தயாரிப்புகளை SMEக்காக ஏற்பாடு செய்யப்பட்ட EDB பெவிலியனில் காண்பிக்கின்றன.
- 150 கைத்தொழில் பங்குதாரர்களின் பங்களிப்புடன் 2020 மார்ச் 04 ஆம் திகதி BMICH இல் வாழ்க்கைமுறையாக வள்ளம் செலுத்துதலை மேம்படுத்ததல் தொடர்பான மாநாடு ஒழுங்கசெய்யப்பட்டது.





- மேற்கு மருத்துவத் துறைக்காக உருவாக்கப்பட்ட ஆடியோ காட்சி அவர்களின் சமூக ஊடக அலைவரிசைகள் மற்றும் வலைத்தளங்களில் விளம்பரப்படுத்த மியான்மரில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு வெளிநாட்டுறவகள் அமைச்சின் மூலம் அனுப்பப்பட்டது.
- "சிலோன் வாசனைத் திரவியம்" பிராண்ட் ஊக்குவிப்பு - தூய இலங்கை கருவா (PCC) சின்னத்தைப் பயன்படுத்த 8 தயாரிப்புகளுக்கு ஐந்து நிறுவனங்களுக்கு புதிய உரிமங்கள் வழங்கப்பட்டன. இரண்டு நிறுவனங்கள் உரிமம் பெறும் பணியில் ஈடுபட்டுள்ளன. DEA & SLSI உடன் இணைந்து இலங்கை கருவாவுக்காக சிக்கித் தயாரிக்கப்பட்ட GAP
- இலங்கை கரிம ஒழுங்குவிதிகளில் திருத்தங்களைச் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.
- ஜப்பானின் டோக்கியோவில் உள்ள இலங்கை தூதரகத்துடன் இணைந்து **"கோவிட் இற்கு பின்னரான பொருளாதார மீட்பு: சவால்கள் மற்றும் வாய்ப்புகள் - இலங்கைக்கான உதவிக்குறிப்புகள் - ஜப்பானில் இருந்து நிபுணர் பார்வைகள்"** என்ற தலைப்பில் ஒரு வெபினாரை ஏற்பாடு செய்தது.
